**தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – 25**

**சுற்றறிக்கை எண். eFile-DOTE/1454 /2026-M1, நாள்05–08–2026**

பொருள்: தொழில்நுட்பக் கல்வித் துறை – தேர்வுப் பிரிவு – அக்டோபர் 2026 பட்டயத் தேர்வுகள் – அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளில் (தன்னாட்சி பாலிடெக்னிக் கல்லூரிகள் தவிர்த்து) முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாம் ஆண்டு (Lateral Entry) மாணவர் சேர்க்கை பெற்ற மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கு சொல்வதை எழுதுபவர் (Scribe), மொழி பாடத்திற்கான தேர்வுகளிலிருந்து விலக்கு மற்றும் தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம் கால அவகாசம் அளித்தல் – இணைய வழியில் விண்ணப்பிக்க கோருதல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை) எண். 62 பள்ளிக் கல்வித் (அ.தே.) துறை, நாள் 25.03.2022.

*******

இவ்வியக்ககத்தின் கீழ் இயங்கும் அரசு / அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளில் (தன்னாட்சி பாலிடெக்னிக் கல்லூரிகள் தவிர்த்து) முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாம் ஆண்டு (Lateral Entry) சேர்க்கை பெற்ற மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கு அக்டோபர் 2026 பட்டயத் தேர்வுகளுக்காக சொல்வதை எழுதுபவர் (Scribe), மொழி பாடத்திற்கான தேர்வுகளிலிருந்து விலக்கு மற்றும் தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம் கால அவகாசம் பெறுவதற்காக கீழ்காணும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி இணைய வழியில் 10.08.2026 முதல் 31.08.2026 வரையிலான காலங்களுக்குள் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வழிகாட்டு நெறிமுறைகள்:–**

1. அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்களுக்கும் FTP Online Portal–இல் மேற்படி இணையதளத்திற்கான பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச் சொல் (Password) வெளியிடப்படும்.
2. சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்கள், மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கு சொல்வதை எழுதுபவர் (Scribe), மொழி பாடத்திற்கான தேர்வுகளிலிருந்து விலக்கு மற்றும் தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம் கால அவகாசம் கோருதல் போன்ற கோரிக்கைகளை https://dote–

decap.vercel.app/ இணைய பக்கத்தில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

3. தபால் மூலமாகவோ (Offline) அல்லது நேரடியாகவோ அளிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. <u>இணையத்தில் விண்ணப்பிப்பதற்கான வழிமுறைகள்</u>

மேற்படி இணைய பக்கத்தில் பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச் சொல் (Password) ஆகியவற்றை உள்ளீடு செய்து Login செய்ய வேண்டும்.

Create Application பக்கத்தில், மாற்றுத் திறனாளி மாணவரின் பெயர், பதிவு எண், பிறந்த தேதி, மாற்றுத்திறனாளியின் தன்மை, சதவீதம், கோரும் சலுகைகள் ஆகியவற்றை பதிவு செய்ய வேண்டும்.

<u>கட்டாயம் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள்</u>

- தமிழக அரசால் வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை (அ) மத்திய அரசால் வழங்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை (அ) மருத்துவக் குழுவின் அறிக்கை (அ) மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவச் சான்றிதழ்
- பத்தாம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் நகல்
- கல்லூரி முதல்வரின் பரிந்துரைக் கடிதம்.

5. முதலாமாண்டு மாணாக்கர்களுக்கு பதிவு எண் பெறப்படவில்லை எனில் அம்மாணவரின் விண்ணப்ப எண்ணே பதிவெண்ணாக எடுத்துக்கொள்ளப்படும்.

6. எதிர்பாராத விபத்தினால் பாதிக்கப்பட்ட மாணாக்கர்களுக்கு அதற்குரிய கலத்தில் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்யும் போது, மருத்துவச் சான்றிதழ் மற்றும் மாணவரின் பெயருடன் கூடிய X-Ray Report ஆகியவற்றை கட்டாயம் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

7. விபத்தினால் கைகளில் பாதிப்படைந்த மாணாக்கர்களுக்கு மட்டுமே Scribe (சொல்வதை எழுதுபவர்) கோரி விண்ணப்பிக்க இயலும்.

8. மேற்குறிப்பிட்ட நாளுக்குள் / உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம்

செய்யப்படாத விண்ணப்பங்கள் இவ்வலுவலகத்தில் பரிசீலிக்கப்பட மாட்டாது,

9. கல்லூரிகளிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களில் குறைபாடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டால், இணைய வாயிலாகவே சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு திருப்பி அனுப்பப்படும். எனவே, முதல்வர்கள் அவ்வப்போது இணைய தளப் பக்கத்தினை பார்வையிட்டு, குறைபாடுகளுடைய விண்ணப்பங்களை சரிசெய்து மீள சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
10. விண்ணப்பிப்பதற்கான தேதி முடிவடைந்த பின்பு, மாணாக்கர்கள் எவரேனும் விபத்தினால் பாதிக்கப்பட்டால், அம்மாணாக்கர்களுக்கு Scribe (சொல்வதை எழுதுபவர்) நியமனத்திற்காக, வட்டார அலுவலர் – III அவர்களை தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
11. கடந்த பட்டயத் தேர்வுகளில் சொல்வதை எழுதுபவர் (Scribe), மொழி பாடத்திற்கான தேர்வுகளிலிருந்து விலக்கு மற்றும் தேர்வு எழுத கூடுதல் கால அவகாசம் பெற்ற மாற்றுத் திறனாளி மாணாக்கர்கள் (விபத்தினால் பாதிக்கப்பட்ட மாணாக்கர்கள் நீங்கலாக) இறுதியாண்டு, இறுதி பருவத் தேர்வுகள் வரை அச்சலுகையினையே பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.
12. மாற்றுத் திறனாளி மாணாக்கர்களுக்கு சொல்வதை எழுதுபவர் (Scribe), மொழி பாடத்திற்கான தேர்வுகளிலிருந்து விலக்கு மற்றும் தேர்வு எழுத கூடுதல் ஒரு மணி நேரம் கால அவகாசம் கோருதல் போன்ற கோரிக்கைகள் பரீசிலிக்கப்பட்டு, அதற்கான இறுதி ஆணையானது இணையதளம் வாயிலாகவே பதிவேற்றம் செய்யப்படும். சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்கள் அதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
13. இப்பொருள்தொடர்பாக ஏதேனும் ஐயம் ஏற்படின், இணைய பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**J A RAJNANDHINI**
**கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்)**

117

**பெறுநர்**

அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள் **(தன்னாட்சி பாலிடெக்னிக் கல்லூரிகள் தவிர்த்து)**

**<u>நகல்:-</u>**
1) கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்) மேஜைக்கு
2) உதவி இயக்குநர் (தேர்வுகள்) மேஜைக்கு
3) தொழில்நுட்ப உதவியாளர் (மதிப்பீடு -I),
   தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,
   சென்னை – 600 025.
4) ‘எம்1’ இருக்கை
5) இருப்புக் கோப்பு
6) சுற்றறிக்கை கோப்பு

117